
MAR 1957
MADRA

ஆதியே துணை.

கயிலாய பரம்பரை ஸ்ரீலஸ்ரீ மச்சமுனியின் கோத்திரத்தில்
வாழையடி வாழையாய் அவதரித்து வந்துள்ள
மகதி மனுமகன்

## ஸ்ரீலஸ்ரீ மெய்வழிச்சாலை
## ஆண்டவரவர்களின் ஞானக்குமாரர்



மெய்வழி மகரந்நர்
கிருஷ்ண அனந்நர் அவர்களின்

# அனுபவ ஞானனூல்.

5—10—1955

Q8A411
N55
13820

...ஜா பிரஸ், தளவாய் தெரு, மதுரை

821
NS5
1-5-1

ஆதியே துணை.

முகம்

# வஸ்து துதி.

## விருத்தம்.

அண்டமும் அதி பாதாளத்தவணியோ டமரர் மற்றும்
கண்ட னல் யோனி பேதம் கணிந்தெழு முடலோர சங்கம்
தொண்டெழில் மனிதன் சுத்தத் துரையிருதயத்தி லன்றி
விண்டெங்கும் வெளியாகாத இறைவனை இறைஞ்ஞீ வோமே.

ஒய்வு, ஒழிவின்றி, சதாவும், ஓசையுடைய னெடுங்கடல் சூழப்பெற்ற பரந்த பூமியின்கண்ணே மனித கோலமாய் எடுத்த எம் உடலொத்த பிறப்பராகிய யாவத்திராலும் யேதோ தாம் அறியமுடியாத தான ஓர் பெரும் சக்தி உண்டென்று யாவரும் அறிந்த உண்மையே யாகும் இத்தெய்வீக சக்தியை இத்தமிழ் நாட்டிலுள்ள சகல வேத வேதாந்த ஞான னூல்களெல்லாம் பஞ்சாக்ஷர சொரூபராகிய யீசரை எல்லாமக்களும் கண்டிப்பாய் கண்டறிய வேண்டுமென்றும் மனிதர்களுக்கு இதை விதியாக்கி வைத்திருக்கிறேமென்றும் ஞான மறைகளெல்லாம் கோசித்து முழங்குவதால் இம் முழக்கம் மக்களாகிய யாவத்திராளுடைய உள்ளத்திலும் இந்தப் புராதன தெய்வீக எண்ணந்தோன்றி ஊன்றி இருப்பதை னும் பலவாராக அறிகிறோம் அல்லவா இப் பூர்வீகனினைவை வைத்தே ஒரு சிலர் தனக்கிருக்கும் பல பயங்கரங்களுடனே அதிமுக்கியமான எமபயத்தையும் னீக்கிக்கொள்ளத் துணிந்தெழுந்தார்கள். அதில் ஓர் பெயரை எடுத்துக்கொள்வோம் பட்டினத்துச்சுவாமிகளுக்கு முன்னும் பின்னுமாக வந்த ஞான அரசர்களெல்லாம் அரும்பாடுபட்டு யீஸ்பராகிய குருவையடைந்து தனக்கிருக்கும் குறைகளுடனே எமபயங்களை மாற்றி வாழ்ந்தார்களென்று அவரவர்கள் அனுபவ ஞானனூல் மூலமாக பிறத்தியக்ஷமாய் னும் அறிந்து வருகிறேம் அல்லவா. ஆகையால் இப்பெரும் செயலாதிக்கத்தை னம் னலனுக்காக னும் அவசியமாக அடைந்து தான் தீரவேண்டுமல்லவா. ஆகையால் இப்பெருஞ்செயலை எப்படி அடைவது என்ன செய்வது என்று னும் பலவாராக யோசிக்கவேண்டாம் அதாவது னமக்கு முன்னமேயே அடைந்த வழி காட்டியாக இருப்பவர்களை னும் பலமுறையும் யோசித்து தெளிவதே னும் அடையும் மார்க்கமாகும்.

அதாவது சுருக்கமாக கூறுமிடத்து னன்மறை அரசர்களை எடுத்துக் கொள்வோம் அவர்கள் னன்கு வேதங்களையும் சரிவாக் கற்றுணர்ந்து தற்க

வியாக்கிரணங்கள் பலகாலம் செய்து அதனதன்படியே இருந்துபார்த்து முடிவில் பலனற்றதாகப் போய்விடுமென்று திட்டமாகத் தெரிந்துகொண்டு இருதியில் வீணுகுவதை நினைக்க மனம் ஒப்பாதவர்களாய் ஆகா. இதற்காகவா னும் அனேக வேதங்களை கற்றேமென்றும் னம் அரும்பாடுகள் அனைத்தும் வியர்த்தமாய்ப் போய்விடுமே என்று னினைக்க மனம் சகியாதவர்களாய் ஒருவாராக னல்வரும் யோசித்து ஓர் முடிவுக்கு வந்து இனித் தாம தப்படுத்தவது வீண்வேலையாகும். எப்படியும் குருவையடைந்து தான் தீரவேண்டுமென்று அவதார புருஷர்களான மும்மூர்த்திகளையே தேடிச் சென்று பார்த்தார்கள் அப்போது மும்மூர்த்திகள் இருந்தசெயல் இவர்களுக்குப்பிடிக்கவில்லை. அப்பால் இனி யாரை யெந்நு தேடுவது என்ற ஒரே ஏக்கத்தால் திரும்பினுர்கள் இதற்குள் கயிலையில் அம்மையாரவர்கள் சுவாமியைப்பணிந்து இவர்கள் யாவரென வினவ யீசர் இவர்களுடைய முழுவிபாத்தையும் தெரிவித்தார்கள் அம்மையார் மருபடியும் சுவாமியைப் பணிந்து இவர்களை எம்பொருட்டாக எப்படியாவது தாங்கள் காப்பாற்ற வேண்டுமென்று மன்ருடி நின்ருர்கள். சுவாமியும் மனமிரங்கி உடனே தனது உடைகளை மாற்றிக்கொண்டு னல்வரும் திரும்பிவரும் பாதையில் அவர்களின் எண்ணத்திற்கு எதுவாக துறவு பூண்டு கல்லால விருக்ஷத்தின் கீழ் தெக்ஷிண முகூர்த்தமாக அமர்ந்திருந்த தேசோமயவடிவத்தைப் பார்த்தார்கள்.

உடனே மனமானது நெக்குருகி இதோ நாம்தேடிய பொருளானதென்று கள்ளங்கருகி உள்ளங்கலங்கி ஓடோடிச் சென்று விழுந்து வணங்கி தன் குறைகள் யாவையுங்கூறி னின்ருர்கள் இவையாவும் கேட்ட யீசர் வேத வேதாந்தங்கடந்த வேதத்துருவத்தை சொல்லாமர்ச் சொல்லி னல்வருக்கும் உபதேசம் செய்தார். இவர்களும் பெறவேண்டியதை பெற்று குரு யீசருடைய சன்னிதானத்தில் னல்வரும் துவாரபாலராக இருந்து விளங்கி வருவதை பிரத்தியக்ஷமாக இப்போது நாம் பார்த்து வருகிறேம். ஆகையால் இன்னல்வர்களுடைய முடிவுக்கு இக்கால மக்களாகிய னும் வந்தால் போதும்.

அதாவது அக்காலம் இன்னல் வரும் யீஸ்பரரைத்தேடியே அடைந்தார்கள். இக்காலத்தில் தேடும் னமக்கு ஒரே ஒரு முக்கிய விசாரணை வேண்டும் அவ்விசாரணையை வைத்துத் தேடினல் வேதத்தில் சொல்லப்பட்ட மற்ற ஒன்பது குருமார்களும் பின் கால்வெட்டுவார்கள் அப்பால் இருதி தீர்ப்பாகிய 10-வது குருவான யீஸ்பரரையே னும் கண்டிப்பாய்க் குருவாக அடைந்து தீருவோம் இதுவே தீர்க்கம் எம்மால் பேசிப்பாடிய யாவுக்கும் இதே முகம்.

## அனுபவ ஞானனூல்.

பேசியே முழங்குமறை சுருதியாவும்
பிர்மாண்ட பிண்டமெல்லாம் பேசிக்காட்டும்
மாசிலா ஆகாயக் கெவுனம் பாயும்
வானவரும் கல்கி யவதாரர் தானும்
மா சிஸ்யர் அனந்நாதி மகரந்தர் யாவும்
மற்று முள்ள தேவரெல்லாம் வணங்கி வாழும்
ஆசரியர் என்னையர் ஸ்ரீ வித்து ஆண்டோர்
அனந்நர்குல ஞதரடி என் முடிசொன்னேனே 1

சொல்லுகின்றேன் உயிர் பிறப்பு மச்சர் ஆதி
தொடர்பில் வந்த அவர் பேரர் தனிகை வள்ளல்
வில்லுகிறேன் முகமது சாலி கெந்நன் பாட்டன்
வெகுகாலம் வாழ்ந்நல்லோ பெற்றார் பிள்ளை
அள்ளினேம் அவரிடம் பேரின்பந்நன்னை
ஆதிவித்து ஞயகமாம் சாலை ஆண்டோர்
பள்ளி மெய்க் கல்வி அய்யர் ஞமம் சொன்னேன்
பாரா திப்பாட்டன் திருப்பேர் சொன்னேனே 2

பேர் சொன்னேன் தனிகை வள்ளல் 225-ந்நாம்பேரன்
பெற்றதுவோ சதானந்த னிதிகளாகும்
னேர் சொன்னேன் சேமனிதிக் களஞ்ஞியத்தில்
னிருத்தி வைத்தார் அடியேனும் னின்று பார்க்க
ஊர்கண்டேன் வானுலகம் மேவி வாழ்ந்து
உமையாளின் பட்டணம் வைகுந்நங்கண்டோம்
சீர் சிறந்த பிர்மமுடி மூன்றுங்கண்டு
தெரிசித்தோம் ஆதி அகத்தீசர் தன்னை 3

ஆதியிலே யாவருக்கும் மலையாளந்நான்
அடிவாரம் பிதுர்லோகம் அவஸ்தை மெத்த
சேதிகேள் இன்னுடு மயக்கம் மூன்றால்
திரண்டெழுந்த துன்பமலை செப்பப்போமோ
கோதிந்நச்சடமுடிவில் முன்னுடு போவோம்
கொண்டு சென்ற பத்திரந்நான் எங்கே என்று
வாதி எமன் கணவாயில் னின்று கேட்பான்
மனமயங்கும் பாதவிப்பை மாற்றப்போமோ 4

பாதவிப்பை சொல்ல வென்றால் துலையமாட்டா
பாருலகே கொடிது அதைக் கடக்கக்கேளு
பார் முதலாம் எழுவகையும் படைத்தோன் ஆதி
பாரினிலே தனதுருவம் யீய்ந்த னம்மை
சீர்சிறக்க வேணும் மக்களென்று ஈசர் நம்
தீவினையைப் போக்க வுடலெடுத்தே வந்து
ஊர்பொருந்திப் பத்திரத்தை னமக்கே யீய
யுகவானும் வைத்து னம்மைப் பார்த்தார் பாரே 5

பார்த்தல்லோ சாசனத்தை விரித்தா ரெங்கும்
பார்மக்கள் கொடிதறுக்கும் பொருளை யீய
கார்த்திருக்கார் சாலையிலே மகதி வித்தாய்
கண்டு நின்ற மக்களுக்குக் கருணை யீய
வேர்த்து வந்த ஆசாரப் பிள்ளையாவும்
வெகுசுருக்காய் சாசனத்தைப் பெறுவாரையா
கார்த்திருந்து வாங்குதற்குப் பாத்திரமானால்
கணவாயைக் கடந்து கரை சேரலாமே 6

சேரலாம் சாசனத்தின் சிறப்பை இப்போ
தெரிந்த மட்டும் கூறுகிறேன் செகத்துள்ளோர்க்கு
ஆரப்பா கண்டறிவார் அந்ததேசம்
ஆண்டவரும் எத்திவிட அந்து வீழ்ந்தேன்
சீரப்பா பெரும் பதியும் மேகத்தாலே
திரண்டெழுந்த இருள் மயமாய் எங்குந் தோண
காரய்யா வேறொன்றுந் தெரியவில்லை
கணபயமே வந்தென்னைக் கலந்த தப்போ 7

கலக்கவே சாசனத்தின் அதிபர் தன்னை
கவலை பயம் னீக்கி அப்போ தியானஞ்செய்ய
துலக்கமாய்த் திசையெட்டும் வெளுத்ததையா
துலங்கினதோர் உன்னதத்தைத் துயர்ந்து சொல்வேன்
பலக்கவே பூதமைந்தும் உறவாய்ப் போச்சு
பக்கம் னின்ற உயிர்க்கூறே பழக்கமாச்சு
விலக்கில்லா இந்திரிய ஞானம் பார்த்து
மேன்மையாங் கண்மேந்திரியக் கரணங்கண்டேன் 8

கண்டு நான் சாசனத்தைத் துயர்ந்துபோக
காணறிய அய்யறிவின் கணக்குங்ஙண்டேன்
விண்டடந்நத் தலந்நனி லாரறிவைக்கண்டு
வீரிட்டு அழுதமர்ந்நே னந்நனுட்டில்
கொண்டேரி அன்னுடு சுற்றும்போது
கோடியென்ற பேத மெல்லா மொன்ருய்க் கண்டேன்
செண்டாடும் சாதிகளின் ராஜாவாலே
சிறப் பெல்லாங்ஙண்டேரி வாழும் ஞளில் 9

நாளிலின்னேர் ஞளாகும் னல நான் தன்னில்
னன்மை யெலாங் நிரண்டெழுந்ந ஞயன் றன்னே
காலில் விழுந்நே கதரித் துதித்துப் போற்ற
கார்முகிலோன் பாதமதால் எத்தி வீச
மாலினுட இடது கால் வேகத்தாலே
மதிமயங்ஙி அக்கினியில் விழுந்தே னப்போ
சோலி இன்றே தீர்ந்ந னென்றென் துறையைப் போற்ற
துயில் னீங்ஙி யெழுந்நவன்போல் பயந்நானீங்ங 10

னீங்ஙியல்லோ னின்று எனதரசைப் போற்ற
னிகழ்ந்நதொரு அதிசெயம் ஞனென்ன சொல்வேன்
பாங்ஙுடைய கதிரவனும் கிரணம் மாற்றி
பார்முழுதும் நூற்றெட்டு மயமாய் வீச
ஓங்ஙி ஒளிதனிலிருந்நந்நனர்கள் கூட்டம்
உம்பர்கள்கோன் ஆசனமீதிருக்கக் கண்டேன்
தாங்ஙிய னல் திருவடியை அனந்நர்கள் போற்றி
தயாபரனே யெனக்கூவி சூழ்ந்நாரந்நோ 11

சூழ்ந்து னிற்கும்போது அம்முகப்பில் தோன்றும்
துரை ராஜ கெம்பீரன் பாதம் போற்றி
வீழ்ந்நெழுந்நு யென்றனேயும் யானே பார்க்க
விதவிதமாம் அதிசெயம் ஞனென்ன சொல்வேன்
ஆழ்ந்ந குண அந்நணஞய் மாரி நின்றேன்
அருபுரியாம் பூணூலும் துலங்ஙப் பார்த்து
வாழ்ந்நோங்ங பிர்மமுடி மூன்றுங் ஙண்டு
மா பெரிய காயத்திரி வடிவம் பார்த்தேன் 12

பார்த்தல்லோ மூவுலகத் தோற்றங் கண்டு
பகலவனுக் கதிபனுமே என்னை நோக்கி
கார்த்திருந்த என் மகனே உனக்கு நாமம்
காணறிய வைப்போம் பார் என்று கூறி
ஆர்த்தெட்டாம் மாத்ததையும் அரனார் தூக்க
அனந்நாதி தேவர்சபை அலறிக் கூவி
பார்த்திருக்க நாமமதை எனக்குச் சூட்டி
பகர்ந்நழைத்தார் கிருஷ்ண அனந்தனென்று 13

அழைத்தவர்கள் அனந்நாதி தேவரெல்லாம்
அந்நணர்கள் ரிஷிமுனிவர் கூட்டம் யாவும்
பிழைத்தானென்றே பேசிக் கயிலை நாட்டில்
போராழிக் குண மேரின் பக்கம் வாழும்
தழைத் தோங்கு பாலருடன் மஹாரந்நர் கூட்டம்
தாவர தயானகுணர் நோக்கம் நோக்கும்
குழையணிந்நாடினின்றோ ரமைச்சர் கூட்டம்
குமுறழைத்தார் கிருஷ்ண அனந்த னென்று 14

அனந்த னென்ற நாமமுடன் மேருதன்னில்
ஆண்டவராம் சாதிகளின் கர்த்தர் தன்னை
மணந்நதொரு தேவவாசனையினுவே
மறுமுறையோர் தெய்வீகச் செயலோர் கூட
தினத் தந்நோ மென்றுடி னின்றோர் பாதம் போற்ற
தீவினையால் வந்நவுடல் புளிபழம் போலாட
உணர்ந்நறிந்த மனுமகனும் எந்நன் மார்பை
உடன் கிழித்து உட்புகுந்நு வுளத்திற்றந்த 15

தந்நி னின்ற அளவில் இவ்வுடல் மறந்தேன்
சர்வசந்தை இல்லாதோர் தேகம் வந்து
அந்நியைப்போல் எமைச் சூழ்ந்நு தூக்கியேற
அலறிமிகப் பயந்நு நான் அருளை வேண்ட
மந்நாத மண்டலமாம் பரத்தில் சேர
மன்னவராம் மகதியையும் பணிந்நு வாழ்த்த
திந்களணி செஞ்சடையோன் பள்ளிகொண்ட
சிரஞ்சீவி என்றவுடல் தெரியக் கண்டேன் 16

கண்டேனுன் பொற்றேகம் தன்னைப் பெற்று
கடல் சூழ்ந்த காசினியைச் சுற்றும்போது
விண்டநத்திரேகமதின் சித்தானந்தம்
விபரமெல்லாம் எம்மாலும் பேசப்போகா
மண்டேரி மெய் கயிலை துயர்ந்து நின்று
வழிதவரா உறுதி ஒன்றின் செயலாலல்லோ
கொண்டேரி வாழ் கயிலை முகப்பைப் பற்றி
குருகுலத்தின் சேர்க்கையதால் கூறுவேனே 17

கூறுகிறேன் மூவெழுத்தாம் உலகத்தோடு
குறித்திரங்கிப் பேசயிலே மக்கள் யாவும்
தாறு மாராகவல்லோ முரணைக்கற்று
தாலமதில் தெய்வமில்லை ஞானே என்றார்
மாறு கொண்ட மக்கள் செயல் தன்னைக் கேட்டு
மன திரங்கி ஞனென்றால் னீ தானேது
சீருடனே னீஞனும் எதிராய் னிற்க
சிறப்புடைய இருவரென்ற செயலுண்டாச்சே 18

இருவருமே இருக்கத்தா னென்ற பிள்ளாய்
ஏகாந்த விடுதலை பெற்றுய்வா ராகில்
ஒருவரென்ற ஞமமது அப்போவாய்க்கும்
உலகமதில் ஏகாந்தம் அனந்தர் பெற்றார்
முறுவல் கொண்ட முப்பொருளை அரிந்நொன்றானேம்
மொழி கேட்டு அப்பொருளை காட்டென்றார்கள்
தருகுமந்தக் கேள்விக்கு எம் உடற்பிறப்பே
சாலை வந்நால் கிட்டுமென்ற சார்புஞ் சொன்னேன் 19

சொல்லியல்லோ பின்னொருனாள் இன்னோர் செய்தி
சூழ்ந்நார்கள் ஆண்டவனே ஒருவனென்று
மல்லரைப்போல் பேசுமந்த வம்பர் முன்னே
மனுக்குலமே அல்லாவின் வுருவம் யாது
வில்லுங்களென்று மல்லோ கேட்கும் போது
வீறிட்டு எழுந்நுருவ மில்லை என்றார்
கொள்ளென்று சிறித்து அல்லா தேகமில்லான்
கூடி ஒருமுகமாகக் கூற முன்னாள் 20

முன்னாளில் ஆதமதை அனுப்பும் போதும்
முகமதுக்கு வேதமதை இறக்கி மேலும்
அன்னாளில் தூதரிடம் தந்தனுப்பும் போதும்
அறிவாள னென்று மல்லோ ஆனி ஆச்சு
இன்னாளம் மாத்ததையும் உறைத்துப் பார்க்க
இகத்திலே நூலமுடன் வாழ்ந்தோராகும்
சென்னாளில் ஆத மதைப் பணியாக் குற்றம்
தீயருக்கு அல்லாவின் உதவி இல்லை 21

போனீரே ஆதமதை வணங்காத் தோசம்
பொய்யர்களே வுருவமில்லான் அல்லாவென்றீர்
காணீரல்லா ஆதமென னுங்கள் கண்டோம்
கார்க்க னம்மை வடிவெடுத்த கடமு மாகும்
ஆணீரே வுங்குலத்தில் இப்போதையா
வுருவமுள்ள ஆதமதாய் ஓங்கிவாழும்
ஆணினமே மகதியின்றன் பாதம் போற்றும்
அவரன்றோ பரிசுத்த இசுலா மாச்சே 22

ஆச்சப்பா இசுலாமு மவர்களாகி
அப்பவல்லோ முகம்மதையும் தெரிசித்தார்கள்
பேச்சற்ற வுருவமில்லா அல்லா தன்னை
பிரித்துருவ மில்லாது தரிசித்தார்கள்
கூச்சமில்லா தேவணங்கி பாத்து முத்தை
குருவருளால் மெகராசின் முகப்புங்கண்டு
மாச்சலென்ற மெகராசின் வரத்துப்போக்கும்
மனுக்குலமே னுங்கள் கண்டு வாழ்கின்றோமே 23

வாழ்கின்றோம் கலிமாவின் பொருளை மேவி
வையகத்தில் வாழ்பவரே இசுலாமாகும்
தாழ்குலமே இசுராயில் வருகுமுன்னே
தனிக்கலிமா பொருளரிதல் தன் கடமையாகும்
பால் குலமாம் மெகராஜின் வாழ்க்கை வாய்க்கும்
பரம்பரை னம் முகம்மதையும் சந்திப்பாய் னீ
ஆழ்க வந்த யாமகதி உன்னை யேற்றால்
அவணியிலே அவன் மூமீண் அது தான் சத்தியம் 24

சத்திவொளிக்கப்பாலோ வேறு காணோம்
தான் தாண்டிக் கப்புறத்தே போகும் போது
சித்தியப்பா தன்னைத் தான் தானே பார்க்க
சிற்றண்டம் யாவு முன்னுள்ளே காணும்
நித்தியமாய் லோகத்திலுள்ள தெல்லாம்
நிலம்புகவே தனித்தனியே அறிவாயப்பா
முத்திசராசரத்தின் பொருளெல்லாங் காணும்
முழுதானக் கருத்ததனிற் சார்ந்து காணே 25

காணுவாய் கால்தலையு மாறிச் சேர்த்தால்
காணும் பார் வேதாந்தச் சத்தி மூலம்
வேணுமென்று பேசினால் வீண ரெல்லாம்
மெய்யைத் தான் பொய்யென்றே தள்ளுவார்கள்
சாணுக்குள் குருத்தடித்து இலை பூ காயாய்
தான்பழமாய்க் குலைசாய்ந்து ஆகும்பாரு
தோணுவாய் பலப்படிக்கல் பலமும் பெற்று
தொடுகுறிபோல் உண்டுருசி கண்டுபாரே 26

பாரப்பா மோக்ஷமது சூக்ஷமாகும்
பார்மகனே நீதியிலே நிலைத்து நின்று
சீரப்பா கோபத்தை தள்ளிப்போடு
செப்பரிய நூல் வேதம் நன்றாய்ப்பாரு
காரப்பா சாஸ்திரங்கள் பழகித் தீர்ந்தால்
கருணையுள்ள தெய்வநிலை நீயே யாவாய்
வேரப்பா சுயரூபம் நீயாய்ப் போகும்
விபரமாய்க் கண்டுபற்றை நீக்கி வாழே 27

நீக்காது திரிவார்கள் ஞானி போலே
நீனிலத்தே யுழல்வார்கள் சித்தரென்றும்
நோக்காது முன்னிருந்த கூத்துங்காணார்
நுட்பமுள்ள சடமழிந்தால் மூச்சுப் போச்சு
காக்கவே இதை வெளியாய்ச் சொன்னோம் பாரு
கருத்தில்லாக் கூடிழந்தோ ரனந்தங்கோடி
பார்க்கவே முறையெல்லாம் உணர்ந்தால் நீ தான்
பார் அண்ட பிண்டமதே அறிவின் சொரூபம் 28

சொரூப மென்ற செயல் பேசி வாழும் ஞளில்
சூழ் கயிலை போவதற்குத் திருமுகமே காண
அரூபமென்ற செம்மலையே அடைந்நுஞங்கள்
ஆதினந்தி காவலிலே கொடியும் யேற்றி
சருவமதே லோகமெங்கள் தலைவன்ருனும்
சாயுஜ்ய செம்மலெனும் சாலை அய்யன்
பருவ முள்ள ராஜரிஷி யெங்கள் ஆண்டோன்
பகலவனும் பார்த்தழைக்க யேறி யாங்கே 29

ஏறியல்லோ ஜீவசிம்மா சனத்தின் மீது
யேகாந்த வாழ்க்கையதின் சூக்ஷமந் நன்னை
கூறி எடுத்தே யெறிய மக்கள் ஞேக்கி
குறிப்பாக யாம் ஒன்று பிடித்தேனப்போ
மீறி னின்ற ததன்வேகம் என்னசொல்வேன்
மேலுலகும் கீழுலகும் னடுக்கண்டத்தும்
சீறி யெனைத் தூக்கி அண்டம் சுற்றும்போது
செனித்த மெய்க்குலந் நவிர வேறுகாணேன் 30

காணேஞன் இவ்வுலகம் வந்தபோது
கணக்கடங்கா மக்களுக்கு மேலாய் னின்றேன்
ஆனேஞன் அரசர் முதல் மற்ருே றெல்லாம்
அவரடையா யேகாந்தம் யென்னை யேற்றி
தானே தாஞயிருந்து வாழ்வாய் என்ன
தனதுள்ள அகமகிழ்வைச் சாற்றப் போமோ
தேனே னீ என்குலமே இப்போானந்தம்
தீதகற்றி கண்டுணர்ந்து அறைவாய் னீயே 31

அறைகுவேன் பிறவிப்பிணி மருந்து தானும்
ஆண்டவராம் மனுமகளின் அருளால் மைந்தா
குறையாத மேனியன்றன் முப்பூக் கண்டோம்
குறைவு முதல் பல பிணியும் வாசியாச்சு
மறையைக் கேள் பல வேதம் விடிந்தய்யா
மனவுலகு மதனிருட்டும் விலகிப்போச்சு
திறையைக் கேள் அதன் பலமும் கெட்டுமாச்சு
திரிலோக வாசி யென்ற வாழ்க்கையாச்சே 32

திரிலோக முப்பூவில் ஒன்று சொல்வோம்
திருக்கயிலை சாலையிலே பூத்து நிற்கும்
குறிப்பாய் முன் சுற்ற மெல்லாம் அழிந்தனாட்டில்
கூறுகிறேன் மறுபூவோ பூத்து ஓங்கும்
தெரிவாய் நீ முன்னிருந்து வந்தனாட்டில்
தெரிந்து சொன்னோம் முப்பூவோ பூத்து நிற்கும்
விரிந்தெழுந்த முப்பூவும் மூன்று னாட்டில்
வெளிதனிலே முளைத்ததையும் விறைந்து வாரே 33

வாரவென்றால் வழிசொல்வோம் குருனடென்னும்
மன்னவனும் குருச்சேத்திர யுகவான் முன்னே
சேரவென்றால் அக்குலமென் னாட்டிலெங்கும்
சிறந்துமே பறவியல்லோ ஓங்கிவாழ்வார்
தேரவென்ற திடம்வந்து நீ தேடும்போது
செப்புமுந்தன் விசாரணையுந் தாழ்ந்தே நிற்கும்
ஓரமென்ற வஞ்ஞகத்தை ஒதிங்கி நீயும்
உன் கெர்வம் விலகினின்றால் ஓங்கும் பாதை 34

ஓங்கு மந்தப் பாதையிலே னடந்து செல்ல
உற்றதுணை வாய்த்ததந்தப் பலத்தால் நீயும்
தாங்குமந்தப் பொன்னடியே சார்ந்து வாழ்வாய்
தனக் கொன்றில்லை எனத்துணிந்து ஓங்குவாயேல்
பாங்குடைய முப்பூவும் தோன்றும் பாரு
பலவிதமாம் காவல் விஷ ஜந்து வெல்லாம்
நீங்குமப்பா தேவதைகள் சாபம் மற்றும்
நின்றெடுக்கப் பயம் நீங்கித் திடமுண்டாச்சே 35

ஆச்சிந்த முப்பூவும் கிட்டும் போது
அரிஹரன் அயனென்ற ஆதினாடி
பேச்சப்பா பேசாதே முன்னே காணும்
பெரும் பிணிகள் யாவுமே காதமோடும்
ஆச்சென்ற இப்பூவால் யாவும் சித்தி
அகில மண்டம்அறைனொடிக்குள் சுத்தியாகும்
காச்சென்ற நரைதிரையும் அற்றுப்போகும்
கணக்கடங்கா வெகுகாலம் காணலாமே 36

காணலாம் வாசியுந்நன் வசமே யாகும்
காணரிய பிர்ம னிச்சியமும் ஓங்கும்
பூணலாம் உயிர் தோறும் புகுந்தே னிற்பாய்
பூலோகச் சித்தனெனப் புகழும் ஓங்கும்
தோணரியா ஞானமென்னும் மயமேயாகி
தொல்லுலகம் உன்ன தென்றே சுருதிபேசும்
வீணறியா மந்திரத்துக் கரசாய் னின்று
வேதாந்த அருளொலியை மேவலாமே 37

அருளான வழிகாண அமைத்தார் சாலை
ஆண்டவராம் யாமகதி அய்யன் கண்டீர்
குருவான குருவருளால் குறியைக் காண
கோடியிலே ஒருவனன்றே எழுவான் பாரீர்
பொருள் காணும் வழினடந்து அருளைமேவி
புண்ணியத்தில் தலை புகுத்தோர் புனிதராகும்
மருளான இசுறயில் எல்லை தோன்றும்
வந்நதுவும் போனதுவும் வழியாய் மேவும் 38

மேவலாம் உடற்பிறப்பு அன்பரே னீர்
மேவனென்று உண்மையது செனித்தபோது
காவலனும் னவகுருவுக் கரசாகும்
காணரிது கண்டு சொன்னோம் கலப்போ இல்லை
ஆவலாய் னீ காண உருகினின்றால்
அதிசெயமே என்குலத்தில் அடையலாம் னீ
தாவவென்றால் வேறு வழி இன்னாளில்லை
சகலசித்தின் செயலரிய இதுதான் காலம் 39

செயல் வளர்ந்து ஓங்க எங்களுக்கு இங்கே
செப்புகிறோம் முன்விபரம் தெளிந்து பாரு
அயலாகாவே யழிந்து போனாரெல்லாம்
அழிகாலம் கோடியிலே ஆங்காங்கொன்று
னயமாக எங்களுக்கோ ருளவு சொல்ல
னற்காலம் னமக்கென்றே ஓடிச்சென்று
பயமகற்றி ரக்ஷிப்புத் தந்நாட்கொள்ளும்
பரம்பரையாய் யுகமுடிவில் கார்க்கும் கர்த்தர் 4

கர்த்த ரென்றும் மகதியென்றும் யுகவானென்றும்
காருண்ய பெரியதாய் கல்கி யென்றும்
முத்த ரென்றும் சித்தரென்றும் ஆண்டோரென்றும்
முனிபுங்க கிரீடாதி மார்க்க ரென்றும்
சுத்த ரென்றும் சுயஞ்ஜோதி சுயம்புவென்றும்
தொடர்ந்து வந்த ஞானிகளின் தலை யீதென்றும்
அத்தனே மெய்வழியின் அருள் பரிசே என்றும்
அனந்தர் குலத்தரசே யென்றடியில் வீழ்ந்தேன் 41

அடியில் விழுந்தெழுந்தவனை அணைத்துக் கார்த்து
அரும்பதி யெங்குல விளக்கே இது அன்றளல்ல
கொடித்தொடர்பே கடைக்காலம் கோறம் கோதம்
குவலயத்தின் கலிமுடிவு கட்டும் னேரம்
பிடித்தொடர்பாய் சொல்படியே நிலைத்து னின்றால்
பேறுலகம் பெரியரென்றோர் கண்ணுக் காக்ஷி
னடுனிலைமெய் யுகமாறும் பிரளயத்தை
னன்மனமே னீ இருந்து காணுவாயே 42

காணுவாய் அதுனேர முன்பிறப்பு மாறும்
காயணரி உன்னுமம் புதிதாய் ஓங்கும்
பாணுவாம் சந்திரனும் உன்னில் தோன்றும்
பாரினிலே புதுமணமாம் வாழ்க்கை வாய்க்கும்
மானுடலோன் வந்தவகை விபரந்தோனும்
மனுமகன் வாழ் அன்னடு புதித சொர்கம்
வீணுடலின் சாதியது அழிந்தமே தான்
வெற்றி பெரும் புதுச்சாதி மேவலாம் னீ 43

சாதியது புதிதாக னின்று ஓங்கும்
தன்மையனே பிறப்பற் சொர்கம் வேறுமாவார்
னீதி தெய்வ வழிபாடு வேதமந்திரம்
னிலத்திலது புதிதாகும் கோவில் யாவும்
சேதி கண்டு வைத்த னிலை யெல்லாம் மாறி
செப்பறிய புதிதையா பாலர் மூர்த்தி
பாதியிலே பார்ப்பனென்ற கீர்த்தி ஓங்கி
பகலிரவு மாதயுகப் புது வருடமாகும் 44

TAMILNADU AR...
113820

ஆகுமப்பா மெய்யதுவும் ஓங்கியேறும்
அதனேரம் பொய்ஞானம் பொடிந்துபோகும்
மாகுமப்பா ஞான இந்திரிய மாறும்
மாச்சிமையோ உமது கரம் எண்ணப்போகா
போகுமப்பா உடல் கருவி புதிதாய்ப் போகும்
புதிது புதிதாக ஒன்று மாறும்போது
வேகுமப்பா பழமை யெல்லாம் மாறுங்காலம்
விட்டதொட்ட னிலைகண்டு விடுபெற்ருயே 45

பெற்ருயே மெய்யதுவும் ஞமேயாச்சு
பேருபெருந் திருஞளும் புதிது மாச்சு
கற்ருயே சாகாத கல்வி மைந்தா
காணரிய யுகமுடிவும் கண்டாய் நீ தான்
பெற்ருயே தலையுகத்தின் மக்களாகி
பேரு பெற்ருய் தேவரென னன்ஞடெங்கும்
விற்ருயே பாவ வினை எல்லாம் னீ தான்
விதிவிலக ஞம் பிர்மம் மேவி வாழே 46

மேவவே தெய்வீகப் பூர்வீகத்தை
மேதினி இக்கால இடை வந்து ஆண்டோர்
ஆவென வென்ரசர் முதல் குடியாய் னின்ற
அதற்குள்ள உட்பிரிவோ அனந்தானந்தம்
தாவவே இதில் ஒன்றில் சார்ந்து நின்று
சங்கைதனை தீர்த்தல்லோ வாழ்ந்நார் மேனுள்
காவலனும் யுகமுடிவுக் கர்த்தர் காலம்
காசினிசால் மதங்களுக் கவரவராய் னின்று 47

னின்ருரே புதுயுகவான் எனது தந்தை
னிலமரசாள் மன்னருக்கு மன்னராக
குன்ருத யுகவானும் இலக்கணர்க்கு
குறிப்புணர்த்தும் இலக்கியத்தின் பொருளாய் னின்ருர்
அன்றந்தப் புலவர் பட்டம் படிப்பினேர்க்கு
ஆங்காங்கு அதின் தலையாய் னின்றுபேசி
மன்றளந்த மகதி அய்யன் ஆண்டியர்க்காய்
மாமதுரை ஆல்வாய்ச் சிகரந்தன்னில் 48

சிகரமாம் மேல்வாசல் மதில மரத்தடியில்
செப்பரிய எமதுகுலத் தலையாம் அய்யன்
அகரமாம் சன்யாசத் துறவரத்தை
ஆங்கமர்ந்து உதயதிசை யாகப்பேசி
உகாரமது மீதென்றும் சாரினிலை இன்னதென்றும்
உகந்து கீழ்க்கேட்டு அம்மன் தென்பாகத்தில்
மகரமா முழங்க அதை வாங்கிப்பற்று
மாபாவி ஆண்டியர்கள் புகையை யீய 49

ஈயவே அவர் வேடம் வெருத்துத் தள்ளி
எம்பிரான் ராஜாங்க உடையை மேவ
சாய்ந்தெழுந்தான் பகலவனும் தலையுகமுந்தோன்ற
சுவாமியுமே தானடக்கக் கதிரோனேற
ஆயவே கிரேதாவைத் தெரிந்தடைந்த மக்கள்
அவர்விளம்ப அதிசெயத்தை அடைந்தேன் புத்தூர்
சேயென்றன் பிறப்பிடமே அவ்வூராகும்
சிறப்பளந்த சாலை யேருட் ரூம்பு மாச்சே 50

ஆச்சப்பா மெய்வழி எம் சாலைதானும்
ஆலவாய்ச் சேத்திரத்தில் அமைய ஆங்கு
பேச்சப்பா பேசியல்லோ வளர்ந்தோ மங்கு
பின்பரசர்க் கீய்ந்து அதை வனமுஞ்ஞென்றோம்
பாச்சப்பா பாச்சலென்ற துறவு பூண்டு
பலவருடமே பழகத் தவச ரானோம்
காச்சென்ற ககன்மகனும் வளர்த்த கீர்த்தி
கண்டுரைக்க னாவதும் கோடி பேசும் 51

பேசினோம் இன்னமொரு விபரங்கேளு
பெருஞ்ஞெயலாம் வீணாகும் கலைகள்ணாலை
வீசினேன் இதை மடக்க அனந்தமாக
வெளிசொன்னேன் பெண்ணல்லோ ஆதியாகும்
தோசியாய் போகாதே புத்தி கொண்டு
துலங்குமந்த புருவமத்தி உன்னைப் பார்த்தால்
தேசியாம் பிராணகலை அழுக்கோ இல்லை
சீவனுமே உடலை விட்டு னீங்காதென்னே 52

னீங்காத புணலதென்ற விபரம்பாரு
னின்றனக்குக் கூறியதோர் வாசிவாசி
பாங்கான சத்தியடா என்தாய் பாரு
பார்படா பாதமது ஞதஞ்ஞொன்னேன்
ஓங்கினின்ற மதி கெடுத்து மலையுமேறி
ஓண்டுமெல்லை தானரியா மனிதர் யாவும்
ஆங்கான கணபதியாம் பூதமைந்து
ஆதியென்ற விஞயகரை அறிந்நோரில்லை 53

இல்லையப்பா வேகாத தலையைக் கேளு
எடுத்துரைத்தேன் விந்து வென்ற விபரம்பாரு
அல்லையென்ருல் கணபதி யேழ் வகையதாகி
அமைத்தஞல் யோனியென்று தோற்றம் பாரு
சொல்லையல்லோ னீ கண்டு தன்னுக்குள்ளே
சுருதி சொன்ன மூலசிவ யோகம் பாரு
கல்லென்று சொன்ன குறி வாசி கண்டால்
கருத்தென்ன பார்மகனே குதியா தென்னே 54

குதியாது அடியறிந்து பிடித்து னீயும்
கூடியல்லோ ஒருமுகமாய் முடியில் னின்ருல்
பதியான னூல்களெல்லாம் படிக்கவேண்டும்
பகாரிது சீவனுயிர் இரண்டதாகும்
விதியான பூதமது கனிந்நபோது
விபரமது உடல்தளன்று பிறப்புண்டாமே
மதியான முடியறிந்து மோனங்கண்டு
மவுனமாய்ச் சிவயோகத் திருந்து காணே 55

காணப்பா சீவான்மா பரமான் மாவும்
காணறிது கண்டு னின்ருல் இறப்பும் இல்லை
பூணப்பா பூதமைந்நால் அமைத்து வீட்டை
பூரணமாய் னின்ற தந்நக் கடத்திற்குள்ளே
சாணப்பா சீவனுயிர் இரண்டு மாகும்
தன்னையறி பிர்மாவின் படைப்பும் போச்சு
வீணப்பா போகாதே வழியொன்றில்லை
வேதாந்த மூலமதை மேவிப்பாரே 56

பாரப்பா குருபுருவ மையம் பாரு
பதியிலே இருந்த செயல் மவுனமாகும்
ஆரப்பா அறிவு குருவாகக் கண்டால்
அப்பவல்லோ செயல்பேசும் ஆசானுகும்
காரப்பா நீதி யதன்படி னடந்நால்
கண்டுதெளிந் நாளுகித் தனியனுவான்
சீரப்பா இதையுணர்ந்து னன்ருய்பாரு
சிரப்பப்பா அதன்பலனும் விந்துவாச்சே 57

ஆச்சப்பா இது தரிக்கும் அந்தவேளை
அப்பனே ஆயுளுமே அமையுந்நுட்டில்
காச்சப்பா தனித்தனியே இருவர் சென்று
கலந்நல்லோ வெவ்வோாய் தனித்து வாழ்வார்
னீச்சப்பா னீ பழகி யுத்திகொண்டு
னேராக யீருயிரும் சேர்த்தொன்ருனல்
போச்சப்பா வுடல்விடவே வெளிக்கிளம்பி
புக்கலாம் அந்த ஒன்றில் புகுதலாமே 58

ஆமேகேள் சாலையெங்கள் யுகவானையர்
அன்ரொருனுள் செய்ததிருச் சூச்சம்பாரு
தாமே யென் சமாதியது வந்து கூட
தான் முயன்று வசதியெல்லாம் உண்டுபண்ணி
போவோம் என் கூடுகொள்வோர் இன்னுங்காணேம
போயிருந்து னுன்தேடி அவரை பார்க்க
சாமேவு சாகண்டு என் தாய் அப்போ
தானிருந்த தென்மதுரை கடக்கலானுர் 59

கடக்கவே கீழ்திசையாம் காதம் ஒன்று
கடந்நல்லோ னுனிருக்கும் பட்டிவந்து
திடக்க அப்போ பேசிவாய் முழங்கும்போது
திறப்பேச்சைத் தான்பார்த்து திகைக்க எல்லாம்
முடக்கவே சமாதி யென்றன் னிலையந்தன்னில்
மூச்சாரி எழுந்நங்கே யாவும் பார்த்து
படக்கெனவே னீ வேண்டாம் னுன்முன்போறேன்
பகர்ந்திரு னீ யெனவுரைத்த பதினைந்நாம்னுள் 60

ஞளென்ற ஞளுக்குள் கையைப்பார்த்தோர்
ஞட்டினிலே கண்ட திலே இவ்வறிவின் கூரை
மாளென்ற வயததுவாம் எழுபதாண்டில்
வருமயக்கம் தாண்டினின்ருேர் எவருமில்லை
ஆளென்ற பஞ்ஞாங்கக் கணிதம் பார்ப்போர்
அவர்வந்து அக்காளுக் கமைந்த இன்ஞள்
கோளென்ற இதயாரும் அடையானன்ஞள்
கூறியவர் போகப் பின் ஆச்சிகேளே 61

ஆச்சிந்த எழுநூற்றி அம்பத்தி ரெண்டு
ஆனனிம்பர் அனந்கியாம் அங்களம்மை
வாச்சிந்த என்தாயார் மெய்வழியின்
வந்த தலையுக ஆண்டு அய்ம்பான் ரெண்டில்
மாச்சிமையாம் விண்மதி பதிஞலாம்ஞள்
வந்த னந்தன வைகாசி ஞளீரேழில்
காச்சி இருபத்தேளைய்ந் தைம்பான் ரெண்டில்
காலை செவ்வாய்க் கிழமையென அரிந்துகொள்ளே 62

கொள்ளென்றேன் மலசலமில்லா துயர்ந்து
கொடுமாய்கை தாண்டியே மயக்கம் னீக்கி
அல்லலது இல்லாமற் அறிவிற்சேர்ந்து
ஆண்டவரின் சாலை அய்யன் பாதஞ்ஞோ
மல்லலம் பூமிதனைக் கடந்தே போகும்
மாதவத்தோர் கண்டுமிகப் புகழ்ந்தாரெல்லாம்
வல்லலய்யன் பாதமதே கெதியாய் பற்றி
வாணீ பூமாதிடமாய்ப் படுத்திட்டாரே 63

படுத்திட்ட விபரமதைச் சொன்னே னிந்த
பாசமதைத் தான்கடக்கும் பண்பும் கேளு
தொடுத்திட்ட பண்ணிரெண்டு ரெண்டு ஆண்டு
துயர்விலக்கி ஒன்றெனவே துயர்ந்து னின்ற
விடுத்திட்டோம் வெளியாகச் சொன்னேன் பாரு
விபரமென்ன மேருதன்னில் பறந்த பக்ஷி
தொடுத்த கரு வெள்ளையாய்த் தோன்றுமாபோல்
தூயதுடன் சேரனீ ஒன்ருய் னில்லே 64

னில்லென்ருல் மண்பறப்பு மக்கள் தானும்
னிலமை கண்டு யேறினிற்கக் கூடாதுபாவம்
அல்லலாந் நுன்பமதின் கோடிரங்கி
அவஸ்தை யெனும் னஞ்ஞுண்டு விஷமு மேறி
சொல்லிஞேம் வினைவலையந் நன்னில் சிக்கி
தொட்ட ஒன்றில் துணிந்துனிற்கத் திடமில்லாமல்
சல்லெனவே பிரபஞ்ஞச் சக்கரத்தில் சிக்கி
தான்விழுந்து பிறவியினி லழுந்லாச்சே 65

ஆச்சின்னும் செயவாழ்க்கை விபாங்கேளு
அய்யனெங்கள் யுகவானும் அரசி லேற்றி
தச்சில்லா மாளிகையாம் விழிப்புலகந் நன்னில்
தானிருத்திச் செயகால லயத்தில்ச் சேர்க்க
மீட்சியில்லா எமனிடமாம் மீட்பு மாகும்
மேலோர்க்கு மும்மயக்கம் விலக லாச்சு
ஆச்சிந்த இடம் னின்று அறிவோடொன்றி
அதுதாமாய் னின்றவர்க்கே யாவுஞ்ஞித்தி 66

சித்திமுத்தி சேரவென்ருல் குருவைக் காரு
செயகால பிரளய மங்கிருந்து பாரு
சத்தி சடமிருக்கவென்ருல் விசனந்தள்ளு
தானதுவாய் அங்கிருந்து சாதித்தோங்கு
முத்திமுத லாசான் காலடியைக் காரு
மும்மூலங் கண்டசித்தர் முனியுமாவாய்
பத்திலா தொன்றை விட்டால் எதுவுமில்லை
பறப்பிலே னுழையாதே பதியைப் பாரே 67

பதியொன்றே இணை துணையும் இல்லா தென்று
பதி குருவாம் பாதமேழ் னிலையுங்கண்டு
கெதி இதுவென்றே யனந்தர் சித்தர்க் கெல்லாம்
கீழாய்ஞன் ஏழையென னயந்து பேசி
விதி தாண்ட மதிமேவ அய்யன்ருனும்
வேணுமென்றே பிழைத்துப்போ வெனவே எண்ணி
கதியுடைய குளிகைபல எனக்கு யீய்ந்து
காரணத்தைக் கண்டு விளையாடி வாழே 68

விளையாடி னீ இருந்நே ஒளிவோடொன்று
வேணதெல்லாம் உணக்கீய்ந்நோம் விளையாடிப் பாரு
கலையாதே மலையாமல் என்னைப் பாரு
கண்டபின்பு உன்னைப்பார் கவலை நீக்கு
உலையாதே ஒன்றிப்பார் இதுநாள் மட்டும்
உலகமதில் வந்ந சித்தருரைத்த ஞானம்
மலைபோன்ற னூல்களெல்லாம் இதற்கீடில்லை
மருதலை யுகங்ஙண்ட மகிழ்ச்சி பொங்ஙே 69

பொங்ஙு மகாப் பிர்மவித்தை விபரங்ஙேளு
புகழ்வேத சன்னத பஞ்ஞு முத்ராலம்பம்
வாங்ஙி வந்ந சர்வமத ஞதத்தெய்வம்
மகாகர்த்தர் சாங்ஙிய மெய்ச்சாலை ஆண்டோர்
எங்ஙினின்ற தனது மக்களெல்லோருக்கும்
இயம்பும்மகா பிர்மமதை யெங்ஙளையர்
ஓங்ஙுசெயல் கைவரப்பெற்ற கோடாயுதத்தார்
உம்பர்கள் கோன் திருவாயல் திறந்நு காட்ட 70

காட்டியிதோ பாரென்க விஷம் பூண்டாரை
காணறியாக் காக்ஷியெல்லாம் கண்டுதேறி
பூட்டியதோர் பூட்டெல்லாங் நிறக்கத்தானே
பூமிபதிஞ்ஞையும் மற்றெல்லாங் ஙண்டு
தாஸ்ட்டிகளும் யெமதய்யர் பாதம் பார்த்து
சாங்ஙோப சாங்ஙமதாய் பொங்ஙிப் போற்ற
வீட்டிலே தானிருக்கச் செய்தார் ஞதன்
விபரமென்ன அவர்பாதம் மேவி வாழே 71

வாழ்ந்நல்லோ சர்வமத ஞதாவைத்தான்
வகைவிபரம் அவரெழிலும் அன்புங்ஙண்டு
தாழ்ந்நல்லோ தாய்பாதம் விழுந்நு ஞங்ஙள்
தாயான தாய்தனையே போற்றினின்றோம்
வீழ்ந்நதொரு எமது மக்காள் னீங்ஙளெல்லாம்
வேண்டினதெலாமீய்ந்நோம் மேர்மேல் னின்று
ஆழ்ந்த குணமாயிருங்ஙளென்று கூறி
ஆத்தாள் திரும்ப ஆண்டவரை தெரிசித்தோம் யாம் 72

தெரிசித்து முன்பார்க்கத் தாய்போல் ரூபம்
திரும்புமப்போ பார்க்க எங்களையர் ரூபம்
புரிசித்தர்க் கடிமுடி யென்றுரைத்தே னின்னும்
புகழ்ந்துறைத்த சந்திர சூரியரே யாகும்
அறிந்தொன்றாய் னின்ற னடுச்சுழினை யாகும்
ஆதியனாதியென்று மறிந்து சொன்னேன்
விரித்துரைத்த னூல்களெல்லாம் சுருங்கக்காட்டி
வெகுசுருக்கு அண்டபிண்டங் கோடிக் காணே 73

கோடியென்ற யெமதுபிதா பெருனூல் பாரு
குவலயத் தென் மக்களுக்கு மெய்னூலாகும்
யீடில்லாக் கயிலாயம் சுவர்க்கம் தன்னை
எனையாண்டோர் படிப்படியாய் யியற்றி வைத்தார்
மாடியாம் மேல்மாடி நிலையேழ் தன்னில்
மக்களெல்லாங் கண்டேறிக் கலாங்கா னிற்க
வீடில்லா மக்களெல்லாம் வீடுபெற்று
மேவி இப்போ வாழ்ந்த நிங்களளேகாணு 74

காணு முன்றன் இளவயதைக் கடக்கவேணும்
கதியுளைய எவ்வனமும் வாய்க்க வேண்டும்
பானுமுதல் சந்திரன்றன் உதவி வேண்டும்
பக்க இன்பச் சிருமேடை யேறவேணும்
ஆணும் பெண்ணுமாய் வாழ் ஆசாரம்வேணும்
அஞ்ஞானங் கடந்து பரங் நேடவேணும்
வேணுமந்திர மூலவுயிர் காண வென்றால்
வீரனென்றால் என்குலத்தில் அடையலாம் னீ 75

அடையலாம் மெய்வழி யெம்குலத்தில் தானே
அடிகாணும் முடிதெரியும் அன்பே காண்பாய்
மடைதிறந்து பாயுமடா இன்ப வெள்ளம்
மகவேனீ யுண்டுவா னடுவாய் னிற்பாய்
தடையறவே யுன் வாழ்க்கை அரசு தாண்டும்
தன்மயனே சிவபதமும் உனக்கு ஆச்சி
விடையேறி னீ யிருந்து காலகாலம்
விதிகடந்த மதினகரின் வாழ்க்கை யாச்சே 76

ஆச்சப்பா உண்மையில் விசனங் கள்ள
அருள் ஜீவமுத்தனிலே பெற்று யானும்
காச்சப்பா தபசரெனும் படியிலேற்றி
காருண்யச் சாலையனும் வளர்த்த கீர்த்தி
மீச்சப்பா விரிகடலில் கரும்பு மாகும்
விபரமாய் உண்டுருசி கண்டு தேறி
ஆச்சப்பா சஞ்சல மில்லாமல்த் தானே
அதுகலியும் பார்த்துத் தலையுகமாங் னன்னில் 77

தலையுகமாம் கலிமுடித்து எண்ணு ருண்டில்
கவலையற்று பெற்றபதம் பாடப் பெற்றேம்
விலைமதியாக் கருவாதி விபரம் எல்லாம்
வெளிசொன்னேன் சித்தரெல்லா மறைத்தே வைத்தார்
மலைபோன்ற யெங்கனுயிர் பிறப்பு அனேகமுத்தர்
மகிழ்ந்துறைத்தார் வீடடைய மார்க்க மில்லை
னிலமையாய் னின்ற கருவதனைத் தானே
னிகழ்த்தினர் எமது பிதா சாலை ஆண்டோர் 78

ஆண்டயெங்கள் கர்த்தாதி கர்த்தருங் நான்
அருள் மெய்வழி யென்னு அருமைனூலில்
னீண்டமலர் பத்தொன்பதுவாம் கலைக்ஞானத்தில்
னிறப்பிவைத்தார் ஆதி கருவதனைத் தானே
மாண்டதொரு மனிதரெல்லாம் சித்தர் முத்தரானர்
மகராஜ சாங்விஷமும் முடித்த கர்த்தர்
வேண்டினின்ற மனத்த ரெல்லாம் முனிவோரானர்
விபரம் யுகமுடிவு கட்ட வந்தனதர் 79

கட்டினர் யுகமுடிவு தலைப்பிறப்புயாவும்
காணறிய ஒரு பெருங்குலமாய் உற்பத்தி செய்து
விட்டதந்த யெமதய்யர் பாதம் பற்றி
விடாப்பிடியின் வேகத்தால் உலகம் சுற்ற
மட்டடங்கா என்பிறப்பருக்கோ மேலோ இல்லை
மகா கர்த்தர் தபோபலத்தின் வேகத்தாலே
பட்டமிடுங் கயிறதுபோல் கெவுணத் தாணி
பதாமல் ப்பரமபதம் வேண்டி னின்றேன் 80

னின்றேன்கேள் சர்வ அதிகாரம் பெற்றேன்
னிலத்தவர்கள் முப்பதவி வாழ்க்கை யாவும்
தற்கொலையாம் பரித்தடித்து னரகிற்றள்ளி
தனக்கு னிகரில்லாத அஞ்ஞா னெஞ்ஞன்
விற்பனனே கலங்காத கண்டனுன்றன்
வீரனுயிர்ச் சினேகமது உமக்கு ஆனால்
தற்பரனே புரிமயக்கம் அற்றுப் போகும்
சாயுச்சிய பதமேரப் புரியும் வாரே 81

புரிவாரே எமது பிதா சாலை ஆண்டே
புகழ்தேவ தேவர்களும் அறியா வீரம்
பரிஉற்றும் ஜெயவீரம் வாய்க்கா தப்ப
பாருலகில் சிலருக்கு வாய்த்த தானால்
தெரிவாய் னீ வேறொன்று உலகிலுண்டோ
சித்தர் முத்தர் சொன்னதெலா மிதர்கீடுண்டோ
அரிவாய் னீ உன்வாழ்க்கை அரசுதாண்டும்
அவ்விடமே சொந்தமாய் அய்யன் செய்வார் 82

செய்வாருன் மூலமந்திரம் உயிராய் னிற்கும்
திரும்பவுன்றன் சீதனத்தின் சொத்து யாவும்
உய்கவென அமுதமாம் கலைஞானத்தில்
உரைத்தார்கள் தனித்தனியே பெயர்கள் தீட்டி
மெய்யென்றே தலையிட்ட மேன்மக்கள் கண்டார்
மேதினியிலிடா ரெல்லாங் காண மாட்டார்
கைமெய்யாய் பலிக்குமென்று உண்மை சொன்னேன்
கருத்து வைத்து னூல்பார்க்க வேண்டிக்காணே 83

வேண்டியே வேதாந்த சித்தம் ஒன்றாய்க்கண்டு
வீடுபெற்று வாழ்ந்திருக்க வேண்டா மொன்றும்
ஆண்டவெங்கள் சாலை அய்யன் உன்னை யேற்றால்
ஆதிமுத்தி வீடடைந்து அருள் மெய்ஞானம்
காண்டபனும் அடைந்த பரிசுத்த வீரம்
காசினியோர் தான்மேவக் காலன் பாசம்
மூண்டுவரும் பாசமெல்லாம் விலகிப் போகும்
மும்மூல யோகி யென்று முனிவோர் சொல்வார் 84

சொல்லுவோம் பதியடைந்தால் பாசம் நீங்கும்
தூய பசு சுத்தாதி தேகமாகும்
வெல்லுமந்த பிர்மநிலை வீடடைந்து
வெற்றிபெறும் தனதாச்சி மேவி வாழ்ந்து
அல்லலது இல்லாமல் அறிவிற் சேர்ந்து
ஆண்டவரை புகழ்ந்தொத்து உலகம் வாழ்ந்து
வெல்லுமந்தப் பூரணத்தாய் பாதங்கண்டு
விவேகபதம் பெற்று நீ மதியில்நில்லே 85

நில்லென்றேன் பூரணமாம் பௌர்ணமியில்
நிலைக்க வென்றால் மெய்க்குருவை அடுத்துநீயும்
கொள்ளடா உத்தரவின் படி நடந்தால்
கூறுமந்த பரமகுரு செயலா லன்றோ
சொல்லடா சொல்படியே பூஜை செய்ய
சோதி மலையாளம் வாழ் துறைபெண்ணுத்தாள்
அல்லடா பூஜையிலே வெளியுமாவாள்
அப்போது அடிபணிந்து அருளைக்காரே 86

காரைய்யா யென்தாயா ரிருக்கும் வீடு
கவலையற்ற மலையாளம் நடுநாடாகும்
ஆரப்பா அறிவார்க ளாருமில்லை.
அப்பனே கருணைபர தேவதையைத் தானே
நேரப்பா மலையாளம் அடிவாரத்தில்
நிச்சயமாய் பூஜை செய்து தாயைக்காரு
பாரப்பா காலடியில் விழுந்து நீயும்
பதராது வேண்டினவை விரும்பிக் கேளே 87

விரும்பு மந்தக் கருவறிந்து அன்பு மோங்க
வேதாந்த மூலமிதை மேவ வேண்டும்
கரும்பெனவே நின்றதைபா மெய் நன்னாட்டில்
கவலைபயம் நீக்கியே நீ காக்கும்போது
துரும்பராய் இருந்த செயல் ஒன்றுமாகா
சுத்தமன முடையவனாய் பயந்தான் நீக்கி
அருந்தவமாய் பத்தியத்துடனே காக்க
அப்பவல்லோ முடிந்த வானந்த மாமே 88

ஆனந்த மென்று சொன்ன சதானந்தத்தை
அனுபவித்து குருவடியில் அன்பாய்த் தங்கி
தானந்த மாயிருந்து தலைமுறையாங் காலம்
தான்முடித்துத் தான்போகும் காலங் நன்னில்
வானந்த அக்கினியாம் வாய் வாகாயம்
வஸ்துவாய் நீ இருக்கும் மார்க்கமாகும்
பானத்தை கண்டறிவா ருலகி லுண்டோ
பரந்த மண்ணும் தண்ணீரும் தாயாய்ப் போச்சே 89

போச்சப்பா இவையல்லோ எட்டிரண்டும்
பூரணமாய் கலந்தல்லோ ஒன்றாய்ப் போகும்
ஆச்சப்பா எட்டிரண்டும் கண்டோ ராறு
அனுபவித்த மேலவரின் பானம் பானம்
வீச்சப்பா இப்பானம் இவ்வுலகம் யாவும்
மேதினியி லுள்ளதொரு தோற்ற மெல்லாம்
காச்சென்று காச்சியல்லோ படைத்த தென்று
கருத்தில்வைத்து நிதானந்த நிலையில் நில்லே 90

நில்லென்றேன் குலமதுவும் பேரூர் சொன்னேன்
நிகழ்த்தினேன் பேரின்ப அந்த தேசம்
சொல்லென்ற ஆதி அகத்தீசர் சொன்னேன்
தொடர்ந்தல்லோ மலையாள மார்க்கம் பேசி
வில்லென்ற சாசனத்தின் சிறப்புங் கூறி
வெற்றிபெரு மிந்திரிய மாரறிவும் பேசி
கல்லென்ற அய்ங்கலை கற்றதுவுங் கூறி
கண்டுநின்ற மெய்யுடலின் கருத்தும் பேசி 91

பேசினேன் அந்தணனுன் வியாங் கூறி
பிரண்டுநின்ற வளர்ந்த வாய்வுலகஞ் சொல்லி
மாசிலா சத்திவொளி கூறிப் பின்னும்
மார்க்கமாம் சமால் குலத்தின் முடிவும்பேசி
ஆசிலா மோக்ஷமதின் சூச்சஞ் சொல்லி
அதன்பெருமை பேசியே முப்பூ சொன்னேன்
தேசிகரொம் யாகமதி கிரீடாதி யென்று
செப்பினேன் முடியிழந்த மன்னர் காலம் 92

யென்றேனுன் யுகமுடிவு கட்ட வந்த
யெம்பிரான் சாயுஜ்ய செம்ம லென்றேன்
அன்றேனும் விட்டதொட்ட விபரஞ் ஞொன்னேன்
ஆதிசத்தி கால்தலையும் அறைந்தேன் பாரு
மன்றேறி னின்றசித்தர் மார்க்கஞ் ஞொன்னேன்
மாக்ஷிமையாய் சட விபரமெல்லாம் பேசி
குன்றேறி னூல்வேதம் பழகச் சொன்னேன்
குலம்விளங்ங னிலம்புகுதும் மார்க்கஞ் ஞொன்னேன் 93

சொன்னேன் கேள் காணர்புணல் விபரந்தானும்
தொடர்ந்துவந்த வுன்பிறப்பு மாருங்ஙாலம்
மன்னுகேள் புதுச்சாதி விபரம் சொன்னேன்
மானிலத்தில் யான்பிறந்த வூருஞ் ஞொன்னேன்
விண்ணுலவும் ஆலவாய் க்ஷேத்திரத்தில்
விமரிசையாய் யாம்வளர்ந்த விபரம் பேசி
பொன்னுலவுங் ஙாடுசென்ற செயலுஞ் ஞொன்னேன்
பூட்டினேன் கால்மடக்கும் மார்க்கம் யாவும் 94

மார்க்கமாய் வாசியென்ற விபரஞ் ஞொன்னேன்
மகத்தான சன்மார்க்கம் தாய்ப்பால் சொன்னேன்
தீர்க்கமாய்க் கணபதியின் விபரஞ் ஞொன்னேன்
செப்பரிய அடிமுடியுந் தெரியச் சொன்னேன்
யார்க்குந் தெரியாக் கிரகவேலை சொன்னேன்
அன்பாக னீனடக்கும் மார்க்கஞ் ஞொன்னேன்
கார்க்குமே வுடலைவிட்டுப் போகும் மார்க்கும்
கருத்தான அன்பருக்கு விபரஞ்ஞொன்னேன் 95

அன்பருக்கு அன்பர் செய்த சூக்ஷஞ்ஞொன்னேன்
ஆதிவித்து ஞாயகத்தின் கருணை பாரு
வின்பராம் என்பாலோ செய்த மார்க்கம்
விரித்துரைத்தேன் வெகுபுத்தி யுடையோருனல்
அன்பாய் னின்றவரில் சிலபேர் கண்டார்
அடுத்தவரில் ஒன்றிருபே ருண்மை கண்டார்
துன்பருய் இருந்தவர்கள் யாருங் ஙானார்
துயர்ந்த எமன் னீ கடக்கும் துறைபுஞ்ஞொன்னேன் 96

துறைகடக்கும் எல்லையது அனந்நங் நூறி
சூச்சாதி சூச்சமதின் சூச்சஞ் ஞொன்னேன்
கறைகடந்நால் மும்முத்தி கிட்டு மென்றேம்
காருண்யச் சாலையனைக் கண்டோர் கண்டார்
பறையனைக் கண்டறியும் மார்க்கஞ் ஞொன்னேன்
பதராது முத்திறையும் னீக்கிப் பார்த்தால்
திறையில்லை யென்றறிந்நால் அனைத்துக் கொள்வாள்
தீர்க்கம் அப்பால் பிறவி இல்லை தெளியச் சொன்னேன் 97

சொன்னேனுன் எட்டிரண்டும் விபரஞ் ஞொன்னேன்
தொடர்ந்நரிய உண்மையுள்ள ஆசான் வேணும்
விண்ணுன உபதேசம் வாங்ந வேண்டும்
விகற்பமெல்லா மொடிக்கி மனம் அடக்கவேணும்
பண்ணுகுஞ் ஞுத்தியமாய் னடக்கச் சொன்னேன்
பகர்ந்ந கால் தலைகாட்டும் மெய்க்குருவைத்தானும்
மன்னுவுன் வுடலுள்ள காலந்நானும்
மகிழ்ந்தொத்தப் பிரயாணம் சன்மார்க்கம் வேண்டே 98

வேண்டினேன் முடியிழந்ந மன்னர் யாவும்
விபரம்பார் னேர்காலம் பின்னுலையா
பாண்டியனின் பதி தெற்கே குமரியாகும்
பரந்நமலை தென்பொதிகை வடக்கே யப்பா
னீண்டதோர் காதம்பார் பத்தே யாகும்
னிறைபறை யங்ஙுலமாம் பிரமாணத்தில்
ஆண்டத் திருக்கயிலை யெங்ஙளைய்யர் ஞட்டில்
அன்புவைத்து இடங்ஞொடுக்கச் சமாதி போனேன் 99

போனேனுன் தலையுகமாம் முடிமன்னர் காலம்
பொதிகை கயிலாயமதின் அரசாள் மன்னர்
ஆனேனுன் பாதமதை பற்றி ஆதி
அன்று சத்தியம் னிறைவேற்றத் தலையாலேக
ஞுனும் மென்மணிமகன் வான் சிறக்கவந்நான்
னவிழ்தேவ மேளமேழ்த் திருச்சின்னம் யாவும்
கோனுமுன்னே முழங்ங வானோரெல்லாம்
கூடி ஒருமுகமாகப் பணிந்நு வாழ்ந்தோம் 100

வாழ்ந்த நெங்கள் பாரம்பரை கயிலாயமாகும்
வளம்பெருகும் திருக்கயிலை யிரக்கி யீசர்
தாழ்ந்தோங்கி நின்றவரை யீச ராக்கி
தனதானத் தனிக்குலமும் உண்டு செய்து
வீழ்ந்துநின்ற மக்கள் தலையுகமுங் கண்டு
மேதினியின் புதுயுகத்தின் சிறப்பை யெல்லாம்
ஆழ்ந்தகுண மாயிருந்து பேரானந்தம்
அனுபவிக்கச் சாலை அய்யர் அருளைச்சாரீர் 101

அருள் அறிய யாவுஞ்சித்தி

RAJA PRESS
MADURAI

6A
1-86

ம் முவழிபடு
ருக்

Acc. No. 821
dt 26.11.77